எனப்படும். பண்புந்தொழிலும் பொருளெனவும்படும். ஆதலால், அவைகளை உணர்த்தும் உரிச்சொற்களும் ஒரோவிடத்துப் பெயர்ச்சொற்கள் எனப்படும்.

௧௪௩. இவ்வுரிச்சொற்கள், ஒரு குணத்தையும் பல குணத்தையும் உணர்த்தி, வரும்.

௧௪௪. சால், உறு, தவ, நனி, கூர், கழி என்பன, மிகுதி என்னும் ஒருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம். உ-ம்.

சால்.—"தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்."
உறு.—"உறுபுனறந் துலகூட்டி."
தவ.—"நயாது வீயு முயிர் தவப்பலவே."
நனி.—"வந்து நனி வருந்தினை வாழிய நெஞ்சே."
கூர்.—"துனிகூ ரெவ்வமொடு."
கழி.—"கழிகண் ணோட்டம்."

௧௪௫. செழுமை என்பது, வளனுங் கொழுப்பும் என்னும் இருகுணத்தை உணர்த்தும் உரிச்சொல்லாம் உ-ம்.

வளம்.—"செழும் பல் குன்றம்."
கொழுப்பு.—"செழுந் தடிதின்ற செந்நாய்."

இவ்வாறே ஒருகுணத்தையும் பல குணத்தையும் உணர்த்தி வரும் உரிச்சொற்களெல்லாவற்றையும் நிகண்டு வாயிலாக அறிந்து கொள்க.

பரீக்ஷை வினாக்கள்.—௧௩௫. உரிச்சொல்லாவது யாது? ௧௩௬. உலகத்துப் பொருள் எத்தனை வகைப்படும். ௧௩௭. இப்பொருள்களுக்குரிய பண்பு எத்தனை வகைப்படும்? ௧௩௮. உயிர்ப்பொருள்களின் குணப்பண்புகள் எவை? ௧௩௯. உயிர்ப்பொருள்களின் றொழிற்பண்புகள் எவை? ௧௪௦. உயிரல்பொருள்களின் குணப்பண்புகள் எவை? பல்வகை வடிவங்களாவன எவை? இருவகை நாற்றங்களாவன எவை? ஐவகை



நிறங்களாவன எவை? அறுவகைச் சுவைகளாவன எவை? எண்வகைப் பரிசங்களாவன எவை? ௧௪௧. உயிர்ப்பொருள் உயிரல் பொருள் என்னும் இருவகைப் பொருள்களுக்குமுரிய தொழிற்பண்புகள் எவை? ௧௪௨. தொழிற்சொல்லை மேலே வினைச்சொல்லென்றும் இங்கே உரிச்சொல்லென்றுஞ் சொல்லியது என்னை? ௧௪௩. இவ்வுரிச்சொற்கள் பொருட்குணங்களை எவ்வாறு உணர்த்தி வரும்? ௧௪௪. ஒருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் எவை? ௧௪௫. பலகுணங்களை உணர்த்தும் உரிச்சொல் எது?

உரியியன் முற்றிற்று.

---

## சொல்லதிகார முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

